✆ 0431 - 2461415

## திருச்சிராப்பள்ளி ஸ்ரீ ஐயப்ப சங்கம்

2, லாசன்ஸ் ரோடு, திருச்சிராப்பள்ளி–620 001



ஔவையார் அருளிய

# ஆத்திசூடி

Rs. 5/-

ஒவ்வொரு மாணவ மாணவியும் அவசியம்
படித்து நடைமுறையில் கடைப்பிடிக்க
வேண்டிய

# ஆத்திசூடி

## கடவுள் வணக்கம்

**ஆத்தி சூடி அமர்ந்த தேவனை**
**ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே.**

ஆத்தி மலர்மாலையை அணிந்திருக்கும் சிவபெருமானுடைய அன்புக்கு உரிய விநாயகப் பெருமானை எப்பொழுதும் வழிபாடு செய்து வணங்குவோம்.

# நூல்

1. **அறஞ் செய விரும்பு.**
   தருமம் செய்ய ஆசைப்படு.

2. **ஆறுவது சினம்.**
   கோபம் அடக்கக்கூடியது.

3. **இயல்வது கரவேல்.**
   கொடுக்க முடிந்த பொருளை தேவைப் பட்டவர்களுக்கு ஒளியாமல் கொடு.

4. **ஈவது விலக்கேல்.**
   ஒருவர் மற்றொருவர்க்குக் கொடுப்பதைக் கொடுக்க வேண்டாமென்று நீ தடுக்காதே.

5. **உடையது விளம்பேல்.**
   உன்னுடைய பொருளை அல்லது கல்வி முதலிய சிறப்பை நீயே புகழ்ந்து பேசாதே.

6. **ஊக்கமது கைவிடேல்.**
   நீ எத்தொழில் செய்யும்பொழுதும் மன வலிமையினைக் கைவிடாதே.

**7. எண் எழுத்து இகழேல்.**

கணிதத்தையும், இலக்கணத்தையும் இகழாமல் நன்றாகக் கற்றுக்கொள்.

**8. ஏற்பது இகழ்ச்சி.**

இரந்துண்டு வாழ்வது பழிப்பாகையால், நீ ஒருவரிடத்தும் சென்று எதையும் வேண்டாதே.

**9. ஐயம் இட்டு உண்.**

இரப்பவர்க்குப் பிச்சையிட்டுப் பின்பு நீ சாப்பிடு.

**10. ஒப்புரவு ஒழுகு.**

உலகத்தோடு பொருந்த நடந்துகொள்.

**11. ஓதுவது ஒழியேல்.**

அறிவு தரும் நல்ல நூல்களை நீ எப்பொழுதும் படித்துக்கொண்டிரு.

**12. ஔவியம் பேசேல்.**

ஒருவரிடத்தும் நீ பொறாமை கொண்டு பேசாதே.

**13. அஃகஞ் சுருக்கேல்.**

மிகுந்த இலாபத்துக்கு ஆசைப்பட்டுத் தானியங்களின் அளவைக் குறைத்து விற்காதே.

**14. கண்டு ஒன்று சொல்லேல்.**

கண்ணால் கண்டதற்கு மாறாகச் சொல்லாதே.

**15. ஙப்போல் வளை.**

நீ பயனுடையவனாயிருந்து உன்னைச் சார்ந்தவர்கள் பயனில்லாதவராயினும் அவர்களை அரவணைத்துக் கொள்.

**16. சனி நீராடு.**

குளிர்ந்த நீரில் நீராடு.

**17. ஞயம்பட உரை.**

கேட்பவர்களுக்கு இன்பம் உண்டாகும்படி இனிமையாகப் பேசு.

**18. இடம் பட வீடு எடேல்.**

அளவுக்குமேல் இடம் வீணாய்க் கிடக்கும்படி வீட்டைப் பெரிதாகக் கட்டாதே.

**19. இணக்கம் அறிந்து இணங்கு.**

நற்குண நற்செய்கை உடையவர் யார் என்று தெரிந்துகொண்டு அவரோடு நட்புச் செய்.

**20. தந்தை தாய்ப் பேண்.**

உன் தாய் தந்தையரை அன்புடன் போற்றிக் காப்பாற்று.

**21. நன்றி மறவேல்.**

உனக்குப் பிறர் செய்த நன்மையை எப்பொழுதும் மறவாமல் இரு.

**22. பருவத்தே பயிர் செய்.**

எச்செயலையும் அதற்குரிய காலத்திலே செய்.

**23. மன்று பறித்து உண்ணேல்.**

பொதுச் சொத்தை அபகரித்து உண்ணாதே.

**24. இயல்பு அலாதன செயேல்.**

நல்லொழுக்கத்திற்கு மாறான செயல்களைச் செய்யாதே.

**25. அரவம் ஆடேல்.**

பாம்பைப் பிடித்து ஆட்டி விளையாடாதே.

**26. இலவம் பஞ்சில் துயில்.**

இலவம்பஞ்சினால் செய்த மெத்தையிலே படுத்து உறங்கு.

**27. வஞ்சகம் பேசேல்.**

கபடச் சொற்களைப் பேசாதே.

**28. அழகு அலாதன செயேல்.**

இழிவான செயல்களைச் செய்யாதே.

**29. இளமையில் கல்.**

இளமைப் பருவத்திலேயே கல்வியைக் கற்றுக்கொள்.

**30. அறனை மறவேல்.**

தருமத்தை எப்பொழுதும் மறவாமல் செய்.

**31. அனந்தல் ஆடேல்.**

மிகுதியாகத் தூங்காதே.

**32. கடிவது மற.**

யாரையும் கோபத்தால் கடிந்து பேசாதே.

**33. காப்பது விரதம்.**

பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமல் அவற்றைக் காப்பாற்றுவதே தவம் என உணர்வாயாக.

**34. கிழமைப்பட வாழ்.**

உன் உடம்பாலும் பொருளாலும் பிறருக்கு நன்மை செய்து வாழ்.

**35. கீழ்மை அகற்று.**

இழிவான குணம், செயல்களை நீக்கு.

**36. குணமது கைவிடேல்.**

நற்குணங்களைக் கைவிடாதே.

**37. கூடிப் பிரியேல்.**

நல்லவரோடு நட்புச் செய்து, பின்பு அவரை விட்டுப் பிரியாதே.

**38. கெடுப்பது ஒழி.**

பிறருக்குக் கெடுதி செய்வதை விட்டுவிடு.

**39. கேள்வி முயல்.**

கற்றறிந்தவர்கள் சொல்லும் நூற்பொருளைக் கேட்க முயற்சி செய்.

**40. கைவினை கரவேல்.**

உனக்குத் தெரிந்த கைத்தொழிலை மற்றவர்களுக்கு ஒளியாமல் செய்.

**41. கொள்ளை விரும்பேல்.**

பிறர் பொருளைக் கவர்ந்து கொள்ள விரும்பாதே.

**42. கோதாட்டு ஒழி.**

குற்றமான விளையாட்டை விட்டுவிடு.

**43. சக்கர நெறி நில்.**

அரசன் கட்டளை வழியில் அடங்கி நட.

**44. சான்றோர் இனத்திரு.**

அறிவொழுக்கங்களில் நிறைந்த பெரியோர்களின் கூட்டத்தைச் சேர்ந்திரு.

**45. சித்திரம் பேசேல்.**

பொய் வார்த்தைகளை மெய்போலப் பேசாதே.

**46. சீர்மை மறவேல்.**

உன்னுடைய புகழுக்குக் காரணமானவற்றை மறந்து விடாதே.

**47. சுளிக்கச் சொல்லேல்.**

கேட்பவர்க்குக் கோபமும் வெறுப்பும் உண்டாகும்படி பேசாதே.

**48. சூது விரும்பேல்.**

ஒருபொழுதும் சூதாடுதலை விரும்பாதே.

**49. செய்வன திருந்தச் செய்.**

செய்யும் செயல்களைத் திருத்தமாகச் செய்.

**50. சேரிடம் அறிந்து சேர்.**

சேரத்தக்க நல்லிடத்தை ஆராய்ந்து அறிந்து சேர்.

**51. சை எனத் திரியேல்.**

பெரியோர் சீ என்று வெறுக்கும்படி வீணாய்த் திரியாதே.

**52. சொல் சோர்வு படேல்.**

நீ பிறருடன் பேசும்பொழுது மறந்தும் குற்றமுண்டாகப் பேசாதே.

**53. சோம்பித் திரியேல்.**

முயற்சியின்றிச் சோம்பேறியாகத் திரியாதே.

**54. தக்கோன் எனத் திரி.**

பெரியோர்கள் உன்னைத் தக்கவன் என்று புகழும்படி நடந்துகொள்.

**55. தானமது விரும்பு.**

தக்கவர்களுக்குத் தானம் கொடுத்தலை விரும்பு.

**56. திருமாலுக்கு அடிமை செய்.**

பெருமாளுக்குச் சேவை செய்.

**57. தீவினை அகற்று.**

பாவச் செயல்களைச் செய்யாதே.

**58. துன்பத்திற்கு இடம் கொடேல்.**

துன்பத்திற்குச் சிறிதும் இடம் கொடுக்காதே.

**59. தூக்கி வினைசெய்.**

முடிக்கத் தகுந்த உபாயத்தை ஆராய்ந்து அறிந்து ஒரு காரியத்தைச் செய்.

**60. தெய்வம் இகழேல்.**

கடவுளை இகழ்ந்து பேசாதே.

**61. தேசத்தோடு ஒத்து வாழ்.**

நீ வசிக்கும் தேசத்தவருடன் பகையில்லாமல் பொருந்தி வாழ்.

**62. தையல் சொல் கேளேல்.**

மனைவி சொல் கேட்டு ஆராயாமல் நடவாதே.

**63. தொன்மை மறவேல்.**

பழைமையாகிய நட்பினை மறந்துவிடாதே.

**64. தோற்பன தொடரேல்.**

தோல்வியடையக்கூடிய காரியங்களில் தலையிடாதே.

**65. நன்மை கடைப்பிடி.**

நல்வினை செய்தலை உறுதியாகப் பற்றிக்கொள்.

**66. நாடு ஒப்பன செய்.**

நாட்டிலுள்ளோர் ஒப்புக்கொள்ளக்கூடிய நல்ல செயல்களைச் செய்.

**67. நிலையில் பிரியேல்.**

உன்னுடைய நல்ல நிலையில் இருந்து தாழ்ந்து விடாதே.

**68. நீர் விளையாடேல்.**

வெள்ளத்திலே நீந்தி விளையாடாதே.

**69. நுண்மை நுகரேல்.**

நோயைத் தரும் சிற்றுண்டிகளை உண்ணாதே.

**70. நூல் பல கல்.**

அறிவை வளர்க்கும் பல நூல்களைக் கற்றுக் கொள்.

**71. நெற்பயிர் விளை.**

நெற்பயிரை முயற்சியெடுத்து விளையச்செய்.

**72. நேர்பட ஒழுகு.**

ஒழுக்கந் தவறாமல் நல்ல வழியில் நட.

**73. நைவினை நணுகேல்.**

பிறர் வருந்தத்தகுந்த தீவினைகளைச் செய்யாதே.

**74. நொய்ய உரையேல்.**

வீணான அற்ப வார்த்தைகளைப் பேசாதே.

**75. நோய்க்கு இடம் கொடேல்.**

உணவு, உறக்கம் முதலியவற்றால் பிணிக்கு இடங்கொடுக்காதே.

**76. பழிப்பன பகரேல்.**

பெரியோர்களால் பழிக்கப்படும் சொற்களைப் பேசாதே.

**77. பாம்பொடு பழகேல்.**

பாம்புபோல் உள்ள கொடியவர்களுடன் பழகாதே.

**78. பிழைபடச் சொல்லேல்.**

குற்றம் உண்டாகும்படி பேசாதே.

**79. பீடு பெற நில்.**

பெருமை அடையும்படியாக நல்ல வழியிலே நில்.

**80. புகழ்ந்தாரைப் போற்றி வாழ்.**

புகழ்ச்சிக்குரிய சான்றோர்களை மதித்து வாழ்.

**81. பூமி திருத்தி உண்.**

பூமியைச் சீர்திருத்திப் பயிர்செய்து உண்ணு.

**82. பெரியாரைத் துணை கொள்.**

பெரியோரைத் துணையாக நாடிக்கொள்.

**83. பேதைமை அகற்று.**

அறியாமையை நீக்கிவிடு.

**84. பையலோடு இணங்கேல்.**

அறிவில்லாத சிறுவனோடு கூடித் திரியாதே.

**85. பொருள்தனைப் போற்றி வாழ்.**

வீண்செலவு செய்யாமல் பொருளை பாதுகாத்து வாழ்.

**86. போர்த் தொழில் புரியேல்.**

யாருடனும் கலகம் விளைவிக்காதே.

**87. மனம் தடுமாறேல்.**

எதனாலும் மனக்கலக்கம் அடையாதே.

**88. மாற்றானுக்கு இடம் கொடேல்.**

பகைவன் உன்னைத் துன்புறுத்தும்படி இடம் கொடுக்காதே.

**89. மிகைபடச் சொல்லேல்.**

வார்த்தைகளை மிதமிஞ்சிப் பேசாதே.

**90. மீதூண் விரும்பேல்.**

மிகுதியாக உணவுண்ணுதலை விரும்பாதே.

**91. முனை முகத்து நில்லேல்.**

சண்டை, சச்சரவில் ஈடுபடாதே.

**92. மூர்க்கரோடு இணங்கேல்.**

மூர்க்கத்தன்மை உள்ளவர்களுடன் சேர்ந்து பழகாதே.

**93. மெல்லி நல்லாள் தோள் சேர்.**

உன் மனைவியுடன் எப்பொழுதுமே சேர்ந்து வாழ்.

**94. மேன்மக்கள் சொல் கேள்.**

நல்லொழுக்கமுடைய சான்றோர் சொல்லைக் கேட்டு நட.

**95. மைவிழியார் மனையகல்**

நல்லொழுக்கத்துடன் இருந்து உன் மனைவியை மட்டுமே எப்போதும் நேசிப்பாயாக.

**96. மொழிவது அறமொழி.**

சொல்லுவதை சந்தேகமின்றித் திருத்தமாகச் சொல்.

**97. மோகத்தை முனி.**

நிலையில்லாத பொருள்களின் மேலுள்ள ஆசையை வெறுத்துவிடு.

**98. வல்லமை பேசேல்.**

உன்னுடைய சாமார்த்தியத்தை நீயே புகழ்ந்து பேசாதே.

**99. வாது முற்கூறேல்.**

பெரியோர்களிடத்தில் முற்பட்டு வாதாடாதே.

**100. வித்தை விரும்பு.**

கல்வியாகிய நற்பொருளை விரும்பு.

**101. வீடு பெற நில்.**

முத்தியைப் பெறும்படி சன்மார்க்கத்திலே நில்.

**102. உத்தமனாய் இரு.**

நற்குணங்களிலே மேற்பட்டவனாகி வாழ்.

**103. ஊருடன் கூடி வாழ்.**

ஊராருடன் நன்மை தீமைகளில் கலந்து வாழ்.

**104.வெட்டெனப் பேசேல்.**

யாருடனும் கத்திவெட்டுப்போலக் கடினமாகப் பேசாதே.

**105.வேண்டி வினை செயேல்.**

வேண்டுமென்றே தீவினைகளைச் செய்யாதே.

**106.வைகறைத் துயில் எழு.**

நாள்தோறும் சூரியன் உதிக்குமுன்பே தூக்கத்தைவிட்டு எழுந்திரு.

**107.ஒன்னாரைத் தேறேல்.**

பகைவரை நம்பாதே.

**108.ஓரம் சொல்லேல்.**

ஒரு பக்கம் சார்பாக நியாயம் சொல்லாதே.

✤ ✤ ✤

## வேண்டுகோள்

*வாழ்க்கையில் மேம்பட்டு சிறந்து விளங்க ஒவ்வொருவரும் ஆத்திசூடியை தவறாமல் படித்து நடைமுறையில் கடைப்பிடிக்க வேண்டும்.*

